# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 ஒக்டோபர் மாதம் 04 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

# நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**IV.** மனுக்கள்

**V.** கேள்விகள்

**01.** **கௌரவ லலித் எல்லாவல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல், சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.09.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)16/83)**

அ. பண்டாரகம பிரதேச சபையின் மகா பெல்லன இறங்கு துறை வீதியில் வீதிக்கும், மற்றும் அருகில் இருக்கும் மதிலுக்கும் பாதிப்பு ஏற்படுமாறு பண்டாரகம பிரதேச சபையின் மூலம் மண் வெட்டுவது இடம் பெற்று உள்ளது என்பதனை அறிவீர்களா ?

ஆ. அப்படியாயின் அம் மண்ணை பிரதேச சபையானது எந் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியது ?

இ. அச் செயற்பாட்டின் போது உரிய வீதிக்கும் மற்றும் மதில்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புத் தொடர்பாக பிரதேச சபை மூலம் ஏதாவது நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டுள்ளதா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

உ. அந்த வீதியில் இருந்து எடுக்கப்படும் மணல் விற்கப்பட்டு உள்ளதா ?

**02.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.09.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)16/84)**

அ. உங்களது அமைச்சுக்கு உரியதாக கணக்காய்வாளரினால் WP/CB/G/ED/2015/3/15/13 ஆம் இலக்க 2015 நவம்பர் 03 ஆந் திகதி கணக்காய்வு விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

ஆ. அப்படியாயின் அது எந்த விடயத்தினை அடிப்படையாகக் கொண்டது ?

இ. கணக்காய்வு அறிக்கையின் சிபாரிசு என்ன ?

ஈ. பாடசாலை ஒன்றில் 10 வருடங்களை விட அதிக காலத்தினை பூர்த்தி செய்த ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய அதன் மூலம் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா ?

உ. மேலே உள்ள சிபாரிசு நடைமுறைப்படுத்திய போது அது சில ஆசிரியர்களுக்கு மட்டும் உரியதாகுமாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்ற தகவல் உண்மையானதா ?

ஊ. அப்படியாயின் அந்த கணக்காய்வு விசாரணைக்குரிய சிபாரிசினை உரிய எல்லா ஆசிரியர்களுக்கும் நடைமுறைப்படுத்துவீர்களா ?

**03.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.09.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)16/85)**

அ. கம்பஹ மாவட்டத்தில் ஹேனகம மகா வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலை ஒன்று காணப்படுகின்றதா ?

ஆ. i. அந்த வித்தியாலயத்தின் தற்போதைய அதிபரின் பெயர் என்ன ?
ii. அந்த பதவியில் நியமிக்கப்படுவதற்கு அவரது தகைமைகள் போதுமானவையா ?

இ. அப் பாடசாலையில் 10 ஆம் தரத்தில் எத்தனை வகுப்புக்கள் காணப்படுகின்றன ?

ஈ. அந்த 10 ஆம் தரத்தில் ஒவ்வொரு வகுப்புக்களிலும் தற்போது உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

**04.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.09.20 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(□/vi (1)16/86)**

அ. மேல் மாகாணத்தினுள் தேசிய ஆசிரிய இடமாற்ற கொள்கைக்கு இணங்கவா ஆசிரிய இடமாற்றம் நடைபெறுகிறது ?

ஆ. அந்த இடமாற்றங்கள் ஒழுங்காகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என்பதனை உறுதிப்படுத்துவீர்களா ?

இ. மேல் மாகாணத்தினுள் மற்றும் வலையத்தினுள் ஆசிரிய இடமாற்றம் மேற்கொள்ளும் அதிகாரம் எவரிடம் கையளிக்கப்பட்டு உள்ளது ?

ஈ. அதற்கு இணங்க பிரதி கல்விப் பணிப்பாளர்களுக்கு இடமாற்றம் செய்யும் அதிகாரம் எவ்வாறு உரித்தாகின்றது ?

உ. பிலியந்தல கல்வி வலையத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தமது அதிகாரத்தினை மீறி இடமாற்ற நடவடிக்கையை மேற்கொண்டு உள்ளனர் என்பதனை அறிவீர்களா ?

ஊ. இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன ?

**05.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ விவசாய, காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்குற்பத்தி சுகாதாராம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)16/87)**

அ. 2016.09.08 மற்றும் 2016.09.09 ஆகிய தினங்களில் உங்கள் அமைச்சின் மூலம் ஹோமாகம வில்பிரட் சேனாநாயக விளையாட்டு மைதானத்தில் கண்காட்சி ஒன்று நடபத்தப்பட்டதா ? அக் கண்காட்சியில் பங்கு பற்றிய பிரமுகர்கள் யார் ?

ஆ. அக் கண்காட்சியின் பிரசார நடவடிக்கைக்காக செலவாகிய நிதியின் அளவு எவ்வளவு ?

இ. அக் கண்காட்சிக்காக செலவாகிய முழு நிதியின் அளவு எவ்வளவு ?

ஈ. விவசாய மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக எத்தனை வியாபார கருமபீடங்கள் கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்தன ?

உ. அவ் வியாபார கருமபீடங்களில் எத்தனை வகையான செடி வகைகள் காட்சிப்படுத்தப்பட்டன ? அச் செடிகளை விற்றதன் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் எவ்வளவு ?

ஊ. விற்பனை செய்வதற்காக அச் செடி வகைகள் எந்த நபரிடமிருந்து அத்துடன் / அல்லது எத் தாபனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன ?

**06.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)16/88)**

அ. கொழும்பு கல்வி வலயப் பிரதேசத்திற்கு உரிய கிளிப்டன் பெண்கள் வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலை ஒன்று காணப்படுகின்றதா ?

ஆ. அப் பாடசாலையில் கல்வி கற்பவர்கள் இந் நாட்களில் தற்காலிக கூடாரங்களில் கல்வி கற்கின்றனர் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. அருகில் உள்ள காணி ஒன்றில் மாடி வீடு ஒன்றை நிர்மாணிக்கும் போது ஒழுங்கான கவனம் ஒன்று இல்லாது நிர்மானிக்கப்படும் சட்டரீதியான கட்டடம் ஒன்றினால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. இப் பிரச்சினைக்கு உரிய முழுமையான அறிக்கை ஒன்றினை இச் சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

**07.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)16/89)**

அ. i. மேல் மாகாணத்தில் உங்கள் அமைச்சின் மூலம் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அம்புயூலன்ஸ் வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ii. அது மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை ?

iii. அம்புயூலன்ஸ் வண்டி பெற்றுக் கொடுக்கும் தேவை காணப்பட்ட போதும் இது வரை வழங்கப்படாத வைத்திய சாலைகள் காணப்படுகின்றனவா ?

iv. அது எந்த வைத்திய சாலைகள் ?

ஆ. i. மேல் மாகாண சபையின் வைத்தியசாலைகளில் பயணத்தில் ஈடுபட முடியாத அம்புயூலன்ஸ் வண்டிகள் காணப்படுகின்றனவா ?

ii. அது எத்தனை ?

iii. பழுதுபார்ப்பு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ள அம்புயூலன்ஸ் வண்டிகள் காணப்படுகின்றனவா ?

iv. அவை எத்தனை ?

v. அவை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு ?

இ. i. பழுதுபார்ப்பு நடவடிக்கைக்காக அனுப்பப்படாது வைத்தியசாலையில் தரித்து வைக்கப்பட்டிருக்கும் அம்பியூலன்ஸ் வண்டிகள் காணப்படுகின்றனவா ?

ii. அது எந்த வைத்தியசாலைகளில் ?

iii. எண்ணிக்கைகள் எவ்வளவு ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. பொது நடவடிக்கை

**01. கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சர் (மே.மா)**

***2016 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க***
***மேல் மாகாணத்தின் தகவல் தொழிநுட்ப வள அபிவிருத்தி நியதிச் சட்டம்***

[முதலாம் முறை வாசித்தல்]

மேல் மாகாண மாகாண சபைக்கு கையளிக்கப்பட்ட விடயங்களுக்கு இணங்க காரியங்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் செயற்பாடுகளை ஒழுங்காகவும், வினைத்திறன் மிக்கதாகவும், பலாபலன் மிக்கதாகவும், பயன்படுத்துவதற்காகவும் காணப்படும் முறைகளின் பகுப்பாய்வு மற்றும் அதிகரிப்பு, கணினி தொழிநுட்பம் அத்துடன் அதனோடு இணைந்த நடவடிக்கைகளை ஒழுங்காகவும் மற்றும் விஸ்தரிப்பதற்காகவும், தகவல் தொழிநுட்பத்தின் பலாபலனை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காகவும், அதனோடு இணைந்த விடயங்களுக்காக ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்காகவும், 2000 ஆம் ஆண்டின் மேல் மாகாணத்தின் தகவல் தொழிநுட்ப நியதிச் சட்டத்தினை இல்லதொழிப்பதற்கான நியதிச்சட்டம் ஒன்றாகும்,

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ சுனில் வடகல அவர்கள்**

சிறந்த வீடொன்றில் வசிப்பது மக்களின் மனித உரிமை ஒன்று என சர்வதேச ரீதியிலும் கூட ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது சர்வதேச சட்டத்திற்கு இணங்க இலங்கையைப் பார்க்குமிடத்து உரிய வீடொன்றைக் கட்டி வாழ்வதற்கு உரிய ஆகக் குறைந்த வசதிகள் இல்லாத வீடுகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பது வெளிப்படையாக தெரிகின்ற விடயம் ஒன்றாகும். அவர்கள் வாழ்ந்த நிரந்தர பூமியை அரசிற்கு கை யேற்றுக் கொண்ட பின்னர் அவ்வாறு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு கையேற்கும்போது எந்தவொரு முறையிலுமான இளப்பீட்டு நிதி அவ் இடங்களில் இருந்து அகற்றப்பட்ட மக்களுக்கு கிடைக்கப் பெறவில்லை அவர்களுக்கு வாடகை வீட்டினை அடிப்படையாகக் கொண்ட மாடி வீடே கிடைக்கப் பெற்றுள்ளது. அவற்றில் வாழ்வதற்குரிய ஆகக் குறைந்த வசதிகளும் கூட இல்லை என்றே கூற வேண்டும்.

எனவே அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பூமிப் பிரதேசத்திற்கு இளப்பீட்டு நிதி ஒன்று செலுத்தப்படாத விடத்தும் அத்துடன் மாடி வீட்டுத் தொகுதியில் வீடுகள் கிடைக்கப் பெற்றிருந்தாலும்

அவற்றுக்கு அறவிடப்படும் குத்தகையை வெட்டிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது 750 சதுர அடி அளவான வீடொன்றையாவது மக்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் மேல் மாகாண மாகாண சபை அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றது. **(பி/vi(1)15/07)**

**02.** **கௌரவ சுனில் வடகல அவர்கள்**

சென்ற அரசாங்கக் காலத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக நகர அபிவிருத்திக்காக காணிகளைக் கையேற்றுக் கொண்ட வேளையில் பல சந்தர்ப்பத்தில் உரிய இடங்களில் வசித்த நபர்களுக்கு இளப்பீட்டு மானியம் ஒன்று இல்லாது பலாத்காரமாக காணிகளைக் கையேற்றுக் கொள்வது இடம்பெற்றது.

தற்போதைய அரசாங்கத்தின் கீழும் அந்த கெட்ட முன் மாதிரி செயற்பாடு இடம் பெற்றுச் சென்று கொழும்பு மாநகர சபைக்கு இணைந்ததாக தோட்டக் காணிகள் பல பொதுவாக மேல் மாகாணத்தில் காணிகள் இளப்பீடுகளை வழங்காது கையேற்றுக் கொள்வது இடம்பெறுகின்றது என மக்கள் முறைப்பாடு செய்வதுடன் இந் நிலைமை காணிகளைக் கையேற்றுக் கொள்ளும் சட்டதிட்டங்களை கடுமையாக மீறும் நடவடிக்கையாகுவதுடன், இது ஒரு கெட்ட முன்மாதிரியான நடவடிக்கையாகும் எனவே இளப்பீட்டு மானியம் ஒன்று இல்லாது நகர அபிவிருத்திக்கு காணிகளை கையேற்றுக் கொள்ளக் கூடாது என இம் மேல் மாகாண மாகாண சபை அரசிற்கு பிரேரணை தெரிவிக்கின்றது.

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2016.09.21 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.